மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 68, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

68—

சரக்குக் கிடங்குகள்

***37720—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பராமரிப்பிலுள்ள சரக்குக் கிடங்குகள் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அவற்றை அதிகப்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தற்போது 230 கிடங்குகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மொத்த கொள்ளளவு சுமார் 7.50 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

(ஆ) ஆண்டிப்பட்டி மற்றும் கும்மிடிப்பூண்டி தாலுகாக்களில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு கிடங்குகள் 66 இலட்சம் ரூபாயில் கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 69, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

69—

வீடு கட்டக் கடன் தொகை

***37365—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—